# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2025 இரட்டை (சூன்-சூலை-94) விலை உருபா 1-50 (இதழ் எண்: 171)

# ஞாயமும் நடுநிலையுமுள்ள அரசானால் 'தடா'ச் சிறையாளிகள் அனைவரையும் விடுதலை செய்க!

## "'தடா'ச் சட்டம் மிகவும் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது'

## சிறுபான்மையினர் தேசிய நலக்குழு கடுமையான கண்டனம்.

"தடா'ச் சட்டம் பெருமளவில் தவறாகப் பயன்படுத்தப் படுவதால், இந்தச் சட்டத்தை அரசு உடனே நீக்கம் செய்ய வேண்டும்' என்று ஓய்வு பெற்ற' உச்ச நெறி மன்ற நடுவர் மாண்பு மிகு 'அரங்கநாத, மிஸ்ரா' தலைமையில் உள்ள 'சிறுபான்மையினர் தேசிய நலக்குழு' இந்திய அரசை மிகவும் வலியுறுத்தியுள்ளது. இதுவும் சில மாநில அரசுகளும் இச் சட்டத்தைத் தாறுமாறாகப் பயன்படுத்திய குற்றத்திற்காக, இதுவரை இச் சட்டத்தின் கீழ் பொய் வழக்குகளிட்டுச் சிறையில் வைத்துக்' கொடுமைகள் பல செய்துள்ள அனைவரையும் அரசு விடுதலை செய்வதே ஞாயமானதும் நடுநிலையானதும் ஆகும்.

இவ்வகையில் இத தேசிய நலக்குழு பலவாறான கண்டனங்களை அரசுக்கு எழுப்பியுள்ளது. இக்குழு அக் கண்டன அறிக்கையில் கூறியுள்ள கண்டனங்கள் வருமாறு:

"இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தும் போது தவறு ஏதும் நிகழாது என்பதை உறுதிப்படுத்த முழுமையான பாதுகாப்பு உறுதிகள் எதுவும் இல்லை. அதனால் இதை உடனடியாக நீக்கம் செய்வது பற்றி அரசு ஆய்வு செய்ய வேண்டும்"

"உண்மையில் எந்த நோக்கத்திற்காகத் 'தடா'ச் சட்டம் இயற்றப்பட்டதோ, அந்த நோக்கத்திற்காக மட்டும் இச் சட்டம் பயன்படுத்தப் படவில்லை."

"சிறுபான்மை வகுப்பினருக்கு எதிராகவும் இச் சட்டம் அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப் படுகிறது"

"தடா'ச் சட்டத்தின் கீழ்ப் பெண்களும் குழந்தைகளும் கூட சிறை செய்யப்பட்டுள்ளனர் என்று பல முறையீடுகள் தெரிவிக்கின்றன"

"இது சிறுபான்மையினர் நடுவில் பெரும் அச்சவுணர்வை ஏற்படுத்தியுள்ளது."

"தடா'ச் சட்டத்தைப் பெருமளவில் மிகத் தவறாகப் பயன்படுத்தியுள்ள இரு மாநிலங்கள் (குறிப்பாகப் பஞ்சாப்,தமிழ்நாடு) உடன் தொடர்பு கொண்டதாகவும், இதையடுத்து அந்த இரு மாநிலங்களிலும் பெரும்பாலான 'தடா'ச் சிறையாளிகள் விடுவிக்கப் பெற்றதாகவும்" இவ்வறிக்கை கூறுகிறது.

"வன்முறைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்காகத் 'தடா'ச் சட்டம் கொண்டுவரப் பெற்றது; ஆனால் கடந்த காலத்தில் குறிப்பாக, கடந்த ஆண்டில் 'தடா'ச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஏராளமான பேர் சிறைப்படுத்தப் பட்டுக் காவலில் வைக்கப் பெற்றதை மக்கள் நலக் குழுக்களும், தொடர்புள்ள தனியார்களும் தங்களது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்."

"ஏற்கனவே நடைமுறையில் உள்ள குற்றவியல் சட்டங்களில், குறிப்பான பிரிவுகளை மீறியவர்களைக் கூட, 'தடா'ச் சட்டத்தின் கீழ் சிறை செய்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது."

"தடா'ச் சட்டத்தின் கீழ் தளை செய்யப் பட்டவர்கள் தொடர்பான வழக்குகளை இறுதியாகத் தீர்வு செய்வது குறைந்து வருகிறது. புலன் ஆய்வு மேற்கொள்ளாமல் நிலுவையில் உள்ள வழக்குகள் அதிகமாகும். இந்தச் சட்டத்தின் கீழ் தளைப்படுத்தப் பட்டவர்களை முறையான உசாவலுக்குப் பின் தண்டிப்பது என்பது மிகவும் குறைவாகும். ஆனால் 'தடா' சட்டத்தின் கீழ் தளைசெய்து காவலில் வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது."

"வழக்கமான சட்ட நடைமுறைகளை மீறி, ஏற்கனவே உள்ள சட்டங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, 'தடா' சட்டம் தவறாகப் பயன்படுத்தப் படுகிறது."

"இந்தக் கருத்துகளில் பெருமளவு உண்மை உள்ளது என்பதைச் சிறுபான்மையினர் குழுத் தலைவரும், அதன் உறுப்பினர்கள் பிறரும் பல்வேறு மாநிலங்களில் சுற்றுப் பயணம் செய்ததன் மூலம் அறிய முடிந்தது."

—இவ்வாறு இந்திய அரசே தன் அதிகார முழுமையாக அமர்த்திய சிறுபான்மையினர் நலக் குழு, பல்வேறு வகையான ஆய்வுக்குப் பின்னர், இப்பொழுது நடைமுறையில் உள்ள கொடுமையும் கடுமையும் வாய்ந்ததும், இப்பொழுதுள்ள கருப்புச் சட்டங்களிலேயே மக்கள் உரிமைகளை மிகுதியும் அடக்கவும் ஒடுக்கவும் ஆன கேடானதுமாகிய 'தடா' சட்டம், உடனடியாக நீக்கத்தக்கது என்று வெள்ளை அறிக்கை கொடுத்த பிறகும், இது இன்னமும் செயலில் இருக்க வேண்டுமா என்று அரசு ஆழமாக எண்ணிப் பார்த்து, அதனை நீக்க செய்வதே ஞாயமும் நேர்மையும் ஆகும்.

இத் 'தடா'ச் சட்டத்தின் கீழ், கோவை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமக் கிருட்டிணன், தலைமை நிலையச் செயலர் ஆறுச்சாமி முதலியோர் கடந்த மூன்றாண்டுகளுக்கும் அதிகமான காலமாகவும், பிற இளைஞர் இயக்கங்களைச் சேர்ந்த ஏறத்தாழ நூற்று ஐம்பது பேர் இரண்டாண்டு, ஒன்றரையாண்டு, ஓராண்டுக் காலமாகவும், தமிழ்நாட்டுச் சிறைகளிலும் இவர்களைப் போலவே ஏறத்தாழ அறுபதாயிரம் பேர் இந்தியப் பிற மாநிலங்களிலும் சிறையுள் வைக்கப் பெற்று வாடி வருகிறார்கள் என்பதை இதன் வழியாக மக்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மக்களுடைய உரிமைக் கோரிக்கைகளை அடக்கி ஒடுக்குவதற்கு 'தடா'விற்கு முன்பே 'என்.எசு.ஏ.' 'மிசா', 'காபெபோசா' முதலிய கருப்புச் சட்டங்கள் ஏற்கனவே நடைமுறையிலிருந்து வருகின்றன. அந்தச் சட்டங்களின் பிடிகளிலும் சிக்கிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கடந்த இரண்டு, மூன்று, ஐந்தாண்டுகளாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் சிறைகளிலும் வைக்கப் பெற்றுக் கொடுமைகள் பட்டுவருகிறார்கள் என்பதையும் அன்பர்கள் மறந்துவிடக் கூடாது.

எனவே, அரசு இக் கருப்புச் சட்டங்களால் அவற்றுக்குரிய குற்றவாளிகளை மட்டுந்தான் சிறைப் படுத்தி வைத்திருக்கின்றது என்று யாரும் கருதிவிடக் கூடாது. ஒரு குற்றமும் செய்யாமலும், அரசுக் கொள்கைக்கும் நடைமுறைகளுக்கும் எதிராகக் கருத்தறிவிப்பவர்களையும், செயல்படுகிறவர்களையும் கூட, சிறையுள் வைத்துப் பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளாக்கி வருகிறார்கள் என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்நாட்டு அரசைப் பொறுத்து, இன்னொரு செய்தியையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இங்குப் பல ஆண்டுகளாகச் சந்தனக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு அரசுக்கு ஒரு பெரிய சிக்கலுக்குரியவனாக உள்ள வீரப்பன் என்பவனைப் பிடிப்பதற்கு இதுவரை தமிழக அரசுக்கு நிரம்பிய பொருட் செலவும் ஆட் சேதமும் ஏற்பட்டிருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே!

இச் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதாகக் கூறிக் கொண்டு தமிழக அரசும் கருநாடக அரசும் பல நூற்றுக் கணக்கான ஏழை எளியவர்களையும் அவர்கள் வீட்டுப் பெண்டு பிள்ளைகளையும் சிறைப்படுத்தியும், கொடுமைப் படுத்தியும், பாலியல் வன்முறை செய்தும், மிகப் பலரை அடித்தும்

Scanned with CamScanner

சுட்டும் கொன்றும் அழிம்பு செய்துள்ளன; இன்னும் செய்து கொண்டு வருகின்றனர். இவர்களுள் பலரை-யும் கூட இத் 'தடா'ச் சட்டத்தில் பொய் வழக்கு-களைப் போட்டுக் காவல்துறை அளவுக்கு மீறிக் கொடுமைகள் செய்தும், அவர்களின் சொத்துகளைச் சூறையாடியும், கையகப் படுத்தியும், கொள்ளை-யடித்தும் துன்புறுத்தி வருகின்றது.

கடந்த (1993)ஆண்டு நாம் சனவரி 26 முதல் ஆகத்து 25 வரை ஏழு மாதங்கள், சென்னைச் சிறையில் 'தடா'ச் சட்டத்தின் கீழ் வைக்கப் பெற்-றிருந்த பொழுது அன்றாடம் இருவர் மூவராகத் தொடர்ந்து தருமபுரி,குளத்தூர், முதலிய சிற்றூர்ப் புறப் பகுதிகளைச் சேர்ந்த ஏறத்தாழ முப்பது ஏழைக் கூலியாட்களை — சிறு சிறு வணிகர்களை இவ்வகையில் சிறைக்குக் கொண்டு வந்தனர். புலி வேட்டைக்குப் போனவன் புலியைப் பிடிக்காத குறைக்குப் பூனைகளைப் பிடித்து வந்ததுபோல், சந்தன வீரப்பனைப் பிடிக்க அறிவும் வலிவும் திறமுமற்ற காவல்துறையினர் அத்தகையவர்களை-யும் அவர்களின் குடும்பப் பெண்களையும் ஈடாகக் கொண்டு வந்ததை நாம் நேரிலேயே கண்டு நெஞ்-சம் பதறியிருந்தோம். அவர்களை அணுகி உசாவிய பொழுது, சந்தன வீரப்பனுக்கும் அவர்களுக்கும் ஊர் சார்ந்த நிலைகளைத் தவிர வேறு ஒரு குற்றமும் செய்யாத அவலங்களை உணர முடிந்தது.

அதே போல், தஞ்சை,திருச்சி, பழனி, ஈரோடு, தர்மபுரி, திண்டுக்கல், மதுரை முதலிய இடங்களி லிருந்தெல்லாம், புலிகள் தொடர்புள்ளவர்கள் என்றும், தமிழ்நாடு விடுதலை பற்றிப் பேசியும் போராடியும் வந்தார்கள் என்றும் குற்றம் சாட்டி இருபது முப்பது பேர்களை — இளைஞர்களைத் 'தடா'-வில் கொணர்ந்து ஒன்று முதல் ஈராண்டுகள் வரை, எந்தவகை உசாவலும், வழக்கும் இன்றித் தொடர்ந்து சிறைப்படுத்தியிருந்தது பற்றி அறிந்து வருந்த வேண்டியிருந்தது. இவற்றுக் கெல்லாம் காவல் துறையின் தவறான நடைமுறை-களும் புரிதல்களும், கொள்ளையடிப்புகளுமே காரணங்கள் என்று அறிந்து வருந்த வேண்டி-யிருந்தது.

அண்மையில் கோவையில், கடந்த 13-6-94. ஆம் நாளன்று, இத் 'தடா'ச் சிறையாளிகளை — குறிப்பாக, **கோவை. இராமகிருட்டிணன், ஆறுச்சாமி** உள்ளிட்டவர்களை விடுதலை செய்யக் கோரி தமிழ்நாடு ஒடுக்கப் பட்டோர் விடுதலை இயக்கச்' சார்பில், ஒரு கண்டனக் கூட்டம் நடை பெற்றது. அதில் ஏறத்தாழ பத்து உரிமை இயக்-கங்கள் கலந்து கொண்டு குரல் எழுப்பியிருந்தன. கூட்டமுடிவில் 'தடா'ச் சிறையாளிகளை உடனடி-யாக விடுதலை செய்யும்படி தீர்மானங்களும் நிறை-வேற்றப் பெற்றன.

அக் கூட்டத்தில் நிறைவேற்றப் பெற்ற ஆறு தீர்மானங்களின் சுருக்கவுரை வருமாறு,

1. கடந்த 30-7-91 முதல் 'தடா'க் கொடுஞ் சட்டத்தின் கீழ்ச் சிறை வைக்கப் பெற்றுள்ள **கோவை:இராமகிருட்டிணன், ஆறுச்சாமி** உள்-ளிட்ட 8 தோழர்களையும் பிற இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் 140 பேர்களையும் உடனே விடுதலை செய்க.

2. 'தடா'க் கொடுஞ் சட்டத்தின் கீழ்ச் சிறைப் படுத்தப்பட்டுள்ள தமிழின மீட்புப் படையினர், சந்தனக் கட்டைக் கடத்தல் வீரப்பனுக்கு உதவிய-வர்கள், ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்திற்குக் குண்டு வைத்துத் தகர்த்தவர்கள் என்று பலவாறுப் பொய் வழக்குப் போட்டுச் சிறைப் படுத்திய ஏது-மற்றவர்கள், ஒடுக்கப்பட்டோர் உரிமைக்குப் போராடும் விடுதலைச் சிறுத்தைகள், திராவிடர் கழக நடுவண் குழு உறுப்பினர் தோழர் குளத்தூர் **மணி** ஆகியவர்களையும் விடுதலை செய்க.

3. 'தடா', தேசிய பாதுகாப்புச் சட்டம், குண்டர் தடுப்புச் சட்டம் முதலிய கருப்புச் சட்டங்களை அரசு திரும்பப் பெறவேண்டும்.'

4. 'தடா'ப் போலும் கருப்புச் சட்டங்களைப் போலித் தனமாக எதிர்க்கும் ஆளுங்கட்சி அல்லாத பிற கட்சிகளை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

5. சட்டப்படி தமிழகத்தில் தங்கியிருந்த ஈழத் தமிழ் ஏதிலியான பாலச்சந்திரனைக் கொடைக்கா-னல் குண்டு வழக்கில் தொடர்பு படுத்திக் கடந்த மூன்று ஆண்டுகளாக வழக்கு நடத்தாமல் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதை இக் கூட்-டம் கண்டிப்பதுடன், அவரை உடனே விடுவிக்கு-மாறு இக் கூட்டம் கோருகிறது.

6. தமிழீழ ஏதிலிகளை (அகதிகளை) முகாம்கள் என்னும் பெயரில் தமிழ்நாட்டில் சிறையை விடக் கொடுமையான முறையில் வைத்துத் துன்புறுத்தப் படுவதையும், அங்கு மாந்த உரிமைகள் மீறப்படு-வதையும் இக் கூட்டம் வெகுவாகவும் கடுமையாக-வும் கண்டிக்கிறது.

இனி, இக் கூட்டத்தைப் போலவே,இத் 'தடா' வின் கொடுமைகளைப் பற்றியும் இதை நீக்க வேண்டிய இன்றியமையாமைகளைப் பற்றியும், தமிழகத்திலும் இந்தியாவிலும் பல வேறு எதிர்க் கட்சிகளும் அறிஞர்களும் கண்டனக் கூட்டங்களை-யும் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் தொடர்ந்து நடத்தியும் அனுப்பியும் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அரசுக்குத் தொடர்ந்து அனுப்பி வந்தாலும் மாநில அரசுகளோ நடுவணரசோ அவற்றுக்குச்செவிசாய்ப்பதே இல்லை. மக்கள் எழுச்சி கொள்ளாத வரையில, அரசு தான் மக்கள் மேல் செலுத்தும் வல்லதிகார அடக்கு முறைகளையும் கொடுமைகளையும் தடுத்துக் கொள்-ளாது: நீக்கிக் கொள்ளாது என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும். அந்த நாளை, நிலையை நாம் அனைவரும் உருவாக்குவோமாக. O

Scanned with CamScanner

தலைநகர்த் தமிழச் சங்கத்தின் சார்பில்

உலகத் தமிழ் மாநாட்டின் போது

# தமிழறிஞர்கள் உண்ணா நோன்பு

(தலைநகர்த் தமிழ்ச்சங்க அறிக்கை)

தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப் பெற்று 38 ஆண்டுகள் ஆகியும் இன்னும் தொடங்கிய இடத்திலேயே உள்ளது.

தமிழ் மக்களுக்காக ஆட்சி செலுத்தும் அரசு பிறப்பிக்கும் ஆணைகள் அனைத்தும் தமிழிலேயே வெளிவருவதே மக்கள் ஆட்சி நடைமுறையாகும். ஆனால், தமிழக அரசு ஆணைகள் அனைத்தும் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே வந்துகொண்டிருக்கின்றன. இந்திய ஆட்சிப் பணியாளர்கள் (I.A.S) தங்கள் நலனுக்காகத் தமிழ் ஆட்சிமொழிக் கொள்கையினைப் பெருமளவு சிதைத்து வருகின்றனர்.

தலைமைச் செயலகத்தின் அனைத்து நிலைச் செயற்பாடுகளும் தமிழிலேயே நடைபெறுமாயின், கீழ்நிலை அரசு அலுவலகங்கள் அனைத்தும் தமிழிலேயே நடைபெறத் தடை ஏதுமில்லை. இந்நிலையினைத் தமிழக அரசின் கவனத்துக்குக் கொண்டுவர, பேரணி, உண்ணா நோன்பு, தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டம், ஆங்கில அரசாணை எரிப்புப் போராட்டம், சட்டப் பேரவை முற்றுகைப் போரட்டம் எனப் பல கட்டப் போராட்டங்கள் நடத்தி அரசைத் தூண்டியும் அரசு செயற்பட மனமின்றி இருப்பது மனத் துயரம் தருவதாகும்.

போராட்டங்கள், அரசுக்கு அடியெடுத்துக் கொடுக்க உதவும் கருவியே. இந்நிலையை உணராத தமிழக ஆட்சியாளர்கள். தமிழ் வளர்ச்சிப் பணியேதும் புதிதாக அறிவிக்காதது ஒருபுறம் இருக்க, தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை இழிவுபடுத்தும் நோக்குடன் மொழிச் சிறுபான்மை உரிமை என்னும் பெயரில் எங்கேயோ புதைந்து கிடந்த பழைய அரசாணை ஒன்றினைப் புதுப்பித்து—மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது போன்ற மொழிகளைச் சில வட்டங்களில் துணை ஆட்சி மொழிகளாக அறிவித்துள்ளமை தமிழ் ஆட்சி மொழிக் கொள்கைக்கு எதிரானதாகும்.

மேலும், ஆங்கிலக் கற்பிப்புப் பிரிவுகளைப் பள்ளிகளில் திறக்க ஆணை இட்டுள்ளமையும், ஆங்கிலத்தின் வளர்ச்சிக்காக—ஆங்கிலப் பயிற்சி இயக்கம் அமைத்துள்ளமையும் இன்றைய ஆட்சியாளர்களின் செயல்களாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் ஆங்கில மழலைப் பள்ளிகள் புற்றீசல்கள் போல் பெருக்கெடுதது வருகின்றன; ஆங்கில வழிப் பள்ளிகள் பல்லாயிரமெனப் பெருகி வருகின்றன. உயர்நிலைக் கல்வி அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருகின்றது. இத்துயர(அவல)த்தைப் போக்கித், தமிழ்வழிக் கல்விக்கான வழியேதும் காணப்பெறவில்லை. தமிழகத்தை ஆண்ட முன்னாள் முதல்வர்கள் தமிழ்மொழியின் ஆக்கத்துக்குச் சில தடயங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவ்வழிகளைப் பின்பற்றிச் செயற்பட முனையாதிருப்பது வருந்தத்தக்கது.

தனக்கெனத் தமிழ் வளர்ச்சியில் வரலாற்றுத் தடயம் ஏதும் பதிக்க முனையாது, வெறும் சொல் முழக்கங்களில் காலத்தைக் கடத்திவிட்டு, 'உலகத் தமிழ் மாநாடு' என்னும் போர்வையில்—தமிழின் வெளிச்சத்தில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதைச் சுட்டிக் காட்டவும், தமிழர்களின் ஒருமித்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழறிஞர்கள் உண்ணா நோன்பு மேற்கொள்வதென முடிவு செய்கின்றோம்.

தலைநகர்த் தமிழ்ச் சங்கச் சார்பாக:

1) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
2) பேராசிரியர் இரா. சேது
3) புலவர். த. சுந்தரராசன்
4) புலவர். வெற்றியழகன்
5) புலவர். ப. சாத்தன்
6) முதறிஞர் ம..சு. சம்பந்தன்
7) கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

## தமிழக வரலாறு எழுத குழு அமர்த்தம்!

தமிழகத்தின வரலாற்றை எழுத தமிழக அரசு அறிஞர்கள் குழு ஒன்றை அமைத்துள்ளது.

அந்தக் குழுவுக்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் சி. பாலசுப்பிரமணியம் தலைவராக இருப்பார்.

தொல்பொருள் ஆய்வு அறிஞர் திருச்சி ஆர். கலைக்கோவா, தமிழ்ப்பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த வரலாற்றுத்துறைத் தலைவர்கள், தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் சிவஞானம் செயலாளராக இருப்பார். பல்லவர் ஆட்சிக் காலத்திலிருந்து வரலாறு எழுதப்படும்.

Scanned with CamScanner

தொடர்: 3 —முன்னிதழ்த் தொடர்ச்சி.

# தமிழா, நீ ஆர்த்தெழு!

-இலெனுர்டு.

இன்று, தமிழ்கூட பேச முடியாத அளவிற்கு இவ்விடங்களில் கன்னட வெறியர்கள் ஆட்டம் போடுகின்றனர். இதுவெல்லாம் போதாதென்று நீலமலை மாவட்டத்தின் ஒரு பகுதியும் தங்களது நாட்டை சேர்ந்ததெனக் கூச்சல் போடுகின்றனர், கோவையிலிருந்து 30 அ.மா; (கி.மீ) தொலைவிலுள்ள அட்டப்பாடியில் பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழ்ந்த போதும் மாநிலப் பிரிவின் போது இது கேரளாவைச் சென்றடைந்தது. இங்குள்ள காடுகளை வெட்டி, விளை—நிலங்களாக மாற்றியது தமிழர்களே. இருப்பினும் இப்போது கேரள அரசு. அடக்கு முறையை நரித்தனமாக இம் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டு அழிம்பு செய்கிறது. பலவகைகளில் இம்மக்களை இங்கிருந்து விரட்ட முயற்சி செய்கிறது. இதைப்பற்றியெல்லாம் இங்கு கேட்பாரில்லை. தமிழகத்தின் வடமாவட்டங்களைத் தெலுங்கர்கள் வன்கவர்பு(ஆக்கிரமித்துக்) கொண்டார்கள் என்பது வெட்டவெளிச்சமான உண்மை. மார்வாரிகள் தமிழகமெங்கும் கிடைக்கும் நிலங்களையெல்லாம் கையகப்படுத்துகிறார்கள். குறிப்பாக அணைக்கட்டுப் பகுதியிலுள்ள விலை மதிப்புள்ள நிலங்களையெல்லாம் கூறு போட்டு விற்று வருகின்றார்கள். விழிமூடித் துயிலும் தமிழனுக்குத் தூக்க மயக்கத்தின் நலமே மேலாகப் படுகிறது. எதையிழந்தாலும் பெறுவது எளிது. மண் இழப்பானது இன அழிவின் உச்சக்கட்டமாகும். நாம் துயிலெழாவிட்டால் தமிழகத்துக்குள்ளேயே தமிழர்கள் அனைவரும் வெகு விரைவில் அடிமைகளாகுவர் என்பது தவிர்க்க முடியாதாகிவிடும்.

நூல் ஆலைகளெல்லாம் தமிழகத்தில்—நெசவு ஆலைகளெல்லாம் வடமாநிலங்களில், உருவாக்க (கச்சாப்)ப் பொருட்கள் இங்கிருந்து செல்ல, உருவடைந்த பொருட்கள் அதிக விலையில் நம் தலை மீது. அப்போதைய கிழக்கிந்தியக் குழுமத்தின் (கம்பெனியின்) வணிகத்திற்கும் அதற்கும் என்ன ஒற்றுமை!

வடவூா நிலங்களில் தொடர்வண்டி வளர்ச்சி வகைத் திட்டங்களெல்லாம் விரைவாகச் செயல்படும் போது, திண்டுக்கல்— மதுரை 66 அ.மா. தொலைவுள்ள பாதையை அகலமாக்க இவர்களுக்குத் தன்னுரிமை (சுதந்திரம்) பெற்று 45 ஆண்டுகள் பிடித்திருக்கின்றன. இன்னும் பல தொடர்வண்டி பாதைகள் அகலமயமாக்கப்படக் காத்துக்கிடக்கின்றன. ஒப்பிட்டுச் செல்லும்போது வடமாநிலங்களில் பயணம் செய்யும் பலர் பயணச்சீட்டு வாங்காமலும், நெறிமுறைகளை மீறியுமே தொடர்வண்டியைப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கெல்லாம் பெருமளவு வசதிகளை அரசு ஆளுமை செய்து வழங்குகிறது. ஐயோ, நாமோ சூத்திரத் தமிழ்நாட்டில் பிறந்து விட்டோம்!

உயர்தரமான-பழுப்பு நிலக்கரி நெய்வேலியில் கிடைக்கிறது. ஏறத்தாழ 3,300 பத்துக்கோடி (மில்லியன்) கல்லெடை நிலத்துக்கடியில் இருப்பதாகக் கணக்கிடப்படுகிறது. இதுவும் வேகமாக வெட்டியெடுக்கப்பட்டு வடக்கே கடத்தப்படுகிறது. கும்பகோணம் பகுதியில் இப்போது மேலும் அதிகமாக நிலக்கரி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு அதைச் சுரண்டுவதற்கான முயற்சியும் தீவிரமாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

**மொழி அழிப்பு:**

**'மொழி அழிந்தால் இனம் அழியும்'** என்பதே உண்மை. மொழிச்சீரழிவு என்பது இனச் சீரழிவின் வெளிபாடே. வடக்கேயிருந்து வந்த பார்ப்பன—வணிகக் கும்பல் இந்தி—சமற்கிருத வல்லாண்மையைப் புகுத்தித் தமிழ் மொழியைத் திட்டமிட்டுச் சீரழித்தனர். இன்றும் நமது பேச்சு வழக்கில் ஏராளமான வடமொழிச் சொற்களே பயன்படுத்துகிறோம்,என்பது பலருக்குத் தெரியாமலேயே இருக்கிறது. அடுத்து, திராவிட மாயையை விதைத்த ஒப்போலை(ஓட்டுப்) பொறுக்கித் திராவிடக் கட்சிகளும் இந்தி எதிர்ப்பு எனும் போர்வைக்குள் ஆங்கில நாகத்தை நுழைய விட்டனர். ஆங்கில மையல் தமிழகமெங்கும் தலைவிரித்தாடத் தொடங்கியது. தாய் மொழியைத் தமிழகத்துக்குள்ளேயே இழிவாய் நோக்கும் நிலை ஏற்பட்டது. இந்த மூடநம்பிக்கையில் சிக்கித்தவிப்போர் இன்று ஏராளம். பிறமொழிக் கலப்பின்றிப் பேசுவது கடினம் எனும் கீழ்நிலை மட்டுமல்லாமல் ஆங்கிலம் மட்டும் கற்றுத் தமிழை அறியாத இழிநிலையும் இங்கு உண்டு. இயலாமையினாலோ, அறியாமையாலோ பிற மொழிப் பேச்சுகளை வழங்குவோரை மன்னிக்கலாம்; மாற்றவும் செய்யலாம். ஆனால் பிற மொழி பேசுவதில் பெருமையும், கலப்பு மொழி பேசித் தன்னை உயர்வாய்க் காட்டுவதும் அருவருப்பானதே. ஆண்டைகளின் மொழியை அரைகுறையாய்ப் பேசி அடிமைகள் பெருமைப்பட்டனர். அப் போலிச் செயலின் தொடர்ச்சியே இது என்று இவர்கள் பார்க்கத் தவறுகின்றனர். இவர்களும் அடிமைகளே! ஆங்கில மையலைத் தமிழகத்தில் புகுத்திய சிறுமை ''திராவிடக் கட்சிகளையே! பெருமளவு சார்ந்தாலும் அதை வளர்த்தெடுத்த 'பெருமை'' பல கிறித்துவ நிறுவனங்களையே சாரும். 'கான்வென்ட் ஸ்கூல்''

என்றாலேயே, அ'து ஆங்கில மொழிக் கல்விக்கூடம் எனும் பெயரைப் பெற்றெடுத்தது. இம்மாதிரியான கல்விக் கூடங்கள் கல்வி வணிகத்திற்கு மட்டுமே பயன்படுகிறது என்பது உண்மை. காசுக்காகக் கீழ்த்தரமான பொத்தகங்களையும், திரைப்படங்களையும் எடுப்போரின் கொள்கையின்மைக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு?!

**இனப்படுகொலைகள்:**

தமிழகத்தின் பல பகுதிகளில் சாதி அடிப்படையில் வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவது, தீண்டாமை நிலைத்திருப்பது பற்றிப் பரவலாகப் பொதுப்படையாகப் பேசிவந்தாலும், இம்மாதிரி நிகழ்வுகளை ஆழமாக உற்று நோக்கும் போது ஓர் உண்மை புலப்படுகிறது. மேல்சாதி நில உடைமையாளர்களுக்கும், தாழ்த்தப்பட்ட உழைப்பாளிகளுக்கும் இடையிலான பகைமை பல்வேறு வகைகளில் வெளிப்பட்டிருக்கிறது. ஆனால் இவற்றில் உடனடி வன்முறை அல்லது படுகொலைகள் என்பவையெல்லாம் மற்றவையிலிருந்து வேறுபாடானது;கொடூரமானது. அதற்கென்று ஒரு குறிப்பிட்ட பின்னணியும் உள்ளது. 1968 திசம்பர் 25-இல் கீழ்வெண்மணிப் படுகொலையில் 44 தாழ்த்தப்பட்டோர் எரித்துக் கொல்லப்பட்ட நிகழ்ச்சி ஒரு கொடிய நிகழ்ச்சி! கூலி கேட்டுப் போராடியவர்களுக்கு இவ்வளவு பெரிய கொடுமையா? தமிழக வரலாற்றில் நீங்காத ஒரு கறையை ஏற்படுத்திய கொடுமையான நிகழ்வு இது. கோபாலகிருட்டிணன்(நாயுடு) எனும் தெலுங்குப் பண்ணையாரின் விலங்குச் செயலே அ'து என்பது இன்னும் அதிர்ச்சியையும் எரிசினத்தையும்(ஆத்திரத்தையும்) உண்டுபண்ணுகிறது. அண்மையில் குறிஞ்சாகுளத்தில் ஆட்டை அறுப்பது போல, தமிழர்கள் நான்கு பேர்கள் கொடுமையாய் துண்டாடப்பட்டதற்கும் காரணம் அதே இனத்தைச் சார்ந்த நாயுடுகளே. பெங்களூர் கலவரங்களில் கன்னட வெறியர்களோடு கைகோத்து நம் இனத்திற்கெதிராக நடத்தப்பட்ட வன்முறைகளுக்குக் காரணமும் அதே தெலுங்கர்களே. ஆக, நமது இனமானது பொருளியல் சுரண்டல், பண்பாட்டுச் சீரழிப்பு, மொழி அழிப்பு எனும் பல அழிம்புகளுக்கு உட்படுத்தப்படுவது ஒரு புறம் இருப்பினும், நம்மவர் மீது குறிப்பாக 'தலித்துகள்' என்று இன்று அணி திரண்டு நிற்கும் நமது தொல்குடியினர் மீது வன்முறையும் கட்டவிழ்த்து விடப்படுகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அன்று நிகழ்த்தப்பட்ட இம்மாதிரியான படுகொலைகள் இன்று மிகப்பொதுவாக நடத்தப்படுகின்றன. செத்த பிணத்திற்கும் நமக்கும் வேறுபாடு இல்லையா? எதிர்த்து எழும் வரை இருட்டு மட்டுமே நமக்குச் சொந்தம்!

ஒரு புறம் வேற்று இனத்தவரின் திட்டமிட்ட கொடுஞ்செயல்களுக்குப் பலியாவது நிகழ்கிறது. மறுபுறம் நம்மீது புகுத்தப்படும் அடிமைத்தனத்தை நாமும் தடுத்திருக்க முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழனது ஆற்றலும், அறிவும், நேரமும் திசை திரும்பிக் கிடக்கின்றன. திரைப்படமும், சாராயமும் இவனை இலக்குத் தவற வைக்கின்றன. உண்மை நிலைகளைக்கூட அறிய முடியாவண்ணம் தமிழன் மயங்கிக் கிடக்கிறானே!

**தமிழா கண்களைத்திற:**

அண்மையில் நடந்த ஒரு சில நிகழ்வுகளைப் பாருங்கள். நடிப்புலகில் தமது ஒப்பற்ற ஆற்றலால் ஓர் ஆழமான முத்திரையைப் பதித்த சிவாசி கணேசன், ஒரு தமிழர். கல்கத்தா நகரில் அண்மையில் ஒரு திரையுலக விழாவிற்கு அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டார். இதுபற்றி யார் இங்கு எதிர்ப்புக்குரல் கொடுத்தது?

இளையராசா, "மாஸ்ட்ரோ" எனும் பட்டத்தை உலகிலேயே எந்தப் பெரிய இசை வல்லுநனும் பெற முடியாத வகையில் இலண்டனில் பெற்று வந்தார். இங்குள்ள நாலாந்தர பார்ப்பன பாகவதனுக்கெல்லாம் புகை(தூபம்) போடுகின்ற தாளிகைகளும், தொடர்பு நிறுவனங்களும் ஏன் இந்தப் பச்சைத் தமிழனின் வெற்றியைக் கண்டு கொள்ளவில்லை?

மீனவக் குடும்பத்தில் பிறந்து, எளிமையில் வளர்ந்து சீனதேசத்திற்குச் சென்று தடகள போட்டியில் பொற்பதக்கத்தை பெற்றுவந்த தமிழ்த் தங்கை அமுதாவை பாராட்டுவதில் மட்டும் ஏன் இங்குள்ள வந்தேறிகள் தவறினார்கள்?

பெங்களூரில் மகராட்டிர சிவாசிக்குச் சிலை வைத்தார்கள். வங்காளத் தாகூருக்குச் சிலை வைத்தார்கள். ஒருவேளை பார்ப்பன ராசாசிக்குக் கூட வைத்திருப்பார்கள். ஆனால், திருவள்ளுவர் சிலை வைக்க மட்டும் முடியவில்லை. ஒருவேளை, "அவன் ஒரு தொல் தமிழன்" என்று இன்று வரலாற்று உண்மைகள் வெளிப்படுவதினால்தானோ!

'புலி ஆதரவு' என்று போலி அரசியல் நடத்தும் வை.கோ. என்பவர் யார்? "ஈழ விடுதலையை ஆதரிக்கிறோம். ஆனால் புலிகளை அன்று" என்று இன்று கரணம்(பல்டி) அடிக்கிறாரே இந்தக் கோபால்சாமி(நாயுடு), இவருடைய பின்னணி என்ன? குறிஞ்சாகுளத்தில் நம்மவர்கள் தெலுங்கு நாயுடுகளால் வெட்டிக் கொலைப்பட்ட பின்பும், அதே வட்டாரத்தை சார்ந்த இவர் பல மாதங்களாக அந்தப் பக்கம் எட்டிக்கூட பார்க்கவில்லையே! இவர் எங்குச் சென்றிருந்தார் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இவரின் சொந்தக்காரர்கள் என்பதனாலா? சில ஆண்டுகளுக்கு முன்னால் உழவர்கள் போராட்டத்தில் தெலுங்கு நாயுடுகள் இறந்தபோது அவர்களின் உடல் எரியூட்டுக்குத் தில்லி பாராளுமன்ற கூட்டத் தொடரிலிருந்து வானூர்தியில் பறந்து பாசத்தைக

Scanned with CamScanner

கொட்டினாரே. என்னே ஆழமான இனப்பற்று! இவர்தானா இந்தத் தமிழகத்தின் புதுவெள்ளி? தமிழன், தமிழினத்தை என்றைக்கடா ஆண்டான்?

தொடர்ந்து வரும் இவ்வடிமைத்தனத்திற்கு நம் பக்கத்திலுள்ள காரணிகள் சிலவற்றையும் நோக்குவோம்.

தமிழனின் தாழ்வு மனப்பான்மை என்பது நம்மை அப்பிக் கொண்டிருக்கும் ஒரு நோய்.

இந்திய மாநிலங்களில் கிழமைக்குக் கிழமை அச்சாகும் கோடிக்கணக்கான 'பரிசுச் சீட்டுகளில' 70 விழுக்காடு தமிழகத்திற்குள்ளேயே விற்பனையாகிறது. தமிழன் தன் உழைப்பை நம்புகிறானா அல்லது ஆகூழை(அதிர்ஷ்டத்தை) நாடுகிறானா?

அய்யப்பன், மூகாம்பிகை, திருப்பதி, நாகூர், வேளாங்கண்ணி என்று ஆண்டாண்டுக்கு 'பக்தி' வாணிகம் அதிகரிக்கிறது. இம்மாதிரியான வாணிக இடங்களிலெல்லாம தமிழர்களே ஈ மொய்ப்பது போலப் போய்ச் சேர்ந்து கடினமாய் உழைத்துச் சேர்த்த பணத்தையெல்லாம் உண்டியலில் கொட்டிவிட்டு மொட்டை அடித்துத் திரும்புகிறார்களே!

திரைப்பட நடிகர், நடிகைகளுக்குத் தமிழகத்தில் இருப்பது போல் சுவைஞர்(இரசிகர்) மன்றங்கள் உலகின் எப்பகுதியிலும் இல்லை. திரைப்பட அரங்குகளில் அளவுக்கு மீறிய எண்ணிக்கையும், அறிவு சார்ந்த நூல்கள், தாளிகைகளின் வறட்சியும பிற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெட்கித் தலைகுனியும் நிலையே உள்ளது.

சாதிச் சங்கங்கள் தமிழகத்தின் சாவக்கேடு! தமிழன், தன் மொழியாலும், இனத்தாலும் ஒன்றுபடாமல் இருப்பதற்கு உள்ள பெரும் தடையே இதுதான். பார்ப்பனியத்தின் பிரித்தாளும் சூழ்ச்சியில் தமிழன் பலிக்கடா ஆனான் என்பதனை வெட்டவெளிச்சமாய் மெய்ப்பிப்பது இதுவே.

கவர்ச்சி அரசியலும் (எ—டு. எம்.சி.ஆர். ஜெயலலிதா) பேச்சு அரசியலும் (கருணாநிதி வைகோ.) தமிழகத்தின் மற்றுமொரு சாவக்கேடு. தமிழர்களை ஒரு நிலையான மூடநம்பிக்கையில் மூழ்கடித்த பொறுப்பு இங்குள்ள எல்லா ஒப்போலை (ஓட்டு)ப் பொறுக்கி அரசியல் கட்சிகளையே சாரும். பச்சை குத்துதல், தீக்குளித்தல், தலைவர்களுக்குக் கோவில் கட்டி வழிபடுதல், ஒழுக்கமற்ற தலைவர்களையும் தலையில் தூக்கிவைத்து ஆடுதல், காலில் விழுதல், வெட்டுருவம் (கட் அவுட்) வைத்தல், ஏழையின் வெயர்வையில் விளைந்த பணத்தை ஆடம்பரத்தில கொட்டி அழிப்பதெல்லாம் தமிழனின் விழிப்புணர்வுக்குப் பெரிய முட்டுக்கட்டைகள்.

தமிழன் எளிதே உணர்ச்சி வயப்படுவான். அவனிடம் தனிமானம் உள்ளது. ஆனால் கூட்டாகக் குமுகத்திற்காக பொங்கி எழும் இனமானம் இல்லை.

**இனி நாம் என்ன செய்வது:**

இன விடுதலையை நோக்கி நம்பிக்கையுடன் செயல்படுவது.

இன விடுதலைக்காகக் தனிப்பட்ட வகையில் ஆழ்ந்து உணர்ந்து. உள்ளார்ந்த முடிவுகளை எடுத்து, அவற்றின் அடிப்படையில் தனி ஈகமும் கூட்டு ஈகமும் இன்று இன்றியமையாததாகின்றன.

மக்கள் நடுவில் விடுதலைக்கான கருத்து அழுத்தம் கொள்வதற்காக அறிந்தவற்றையும் உணர்ந்தவற்றையும் செல்லுமிடமெல்லாம் எடுத்தியம்புவது.

நம் தொல் தமிழரின் (தாழ்த்தப்பட்டவர்களின்) மற்றும் பெண் விடுதலையும் இல்லாமல் இனவிடுதலையானது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கிய கதையாய்ப் போய்விடும். ஆகவே இம்மாதிரியான விடுதலைப் போராட்டங்களிலாவது முழுமையாக நம்மை ஈடுபடுத்துவது.

முயற்சி செய்து தனித்தமிழ் பேசுவது—எழுதுவது. இரு தமிழர்கள் சந்திக்கும் போது பிறமொழிக் கலப்பின்றிப் பேசி, அதுபற்றிப் பெருமைப் படுவது. தாய்மொழிவழிக் கல்வியை எல்லா இடங்களிலும் கொணர அயராது பாடுபடுவது.

போராட்ட உணர்வுகளையும், எதிர்ப்பு ஆற்றலையும் நம் மக்களிடம் வளர்த்தெடுப்பது. ஞாயம் தவறும் அதிகாரிகள், ஆட்சியாளர்கள், அரசியல்காரர்களுக்கெதிராக அமிழ்ந்து கிடக்கும் மக்கள் வெறுப்பு உணர்வுகளை முழுமையாக அரசியல் ஆற்றலாக மாற்றி அதைக் கூர்மைப் படுத்துவது.

இறுதியாக, ஈகமும், இழப்புமின்றி வாழ்வில்லை. அறிஞர் குழு சொல்லுவது போல, ''தமிழினமென்னும் ஒரு மூத்த இனம், அடுத்த கால் நூற்றாண்டில் முகவரி இல்லாது போகின்ற பேரிடர், தலைக்கு மேலே தொங்குகின்ற கூர்வாளாக ஆடி அசைந்து நிற்பதைத் தமிழினம் உடன் உணர்ந்தாலன்றி விடிவுமில்லை; வருங்காலமுமில்லை. வரலாறு இன்றும் விடுக்கும் இவ்வழைப்பை நாம் தட்டிக்கழித்தால வரும் தலைமுறை நம்மை ஒருக்காலும் மன்னிக்காது. O

---

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம். —அமைச்சர்.

Scanned with CamScanner

# 'அண்ணா' வழியா?

--மீட்பன்.

திரு, சி.நா.அண்ணாதுரை. இவர் 'சி.என் ஏ' என அழைக்கப் பெற்றார். இவர் பெயர் 'அண்ணாதுரை'யா, அண்ணாத்துரையா இலக்கண ஆய்வு நடத்தி அறிஞர் அப்பாத்துரையார், 'அண்ணாதுரை' சரியே' என 'முட்டுக் கொடுத்து'க் காப்பாற்றினார். 'அறிஞர் அண்ணா,' இராசாசியை 'மூதறிஞர்'என்றதும், 'அறிஞராக'இருந்த அண்ணாதுரையைப் 'பேரறிஞர் 'ஆக்கினார்கள். 'அண்ணா' என்று அகவை வேறுபாடின்றி அனைவராலும் அழைக்கப் பெற்றவர் திரு.அண்ணாதுரை.இவரைப் பற்றி 'எதிரும் புதிருமாக' எழுதாத ஏடுகள் குறிப்பாகத் தமிழகத்தில் இல்லையென்றே சொல்லாம்.

தேர்தலில் இறங்கும் முன்பு அண்ணாதுரையைத் தாக்கிய பலரும், தேர்தலில் படிப்படியான வெற்றிகளைப் பெற்றபோது தி.மு.க பற்றிய எதிர்ப்பு மெல்ல மெல்லக் குறைந்தது. அண்ணாதுரையின், கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களே இதற்குக் காரணம் எனலாம். தேர்தலுக்கு முன் அண்ணா, தேர்தலுக்குப் பின் அண்ணா என்று பிரித்துப் பார்த்தால் அவருடைய மெலிவுகள் தெரியும்; வலிவுகள் புரியும். எதிர் நிற்பவரையும் இழுக்கும் பேச்சாற்றல் உள்ளவர் அண்ணாதுரை. அவ்வாறு இழுப்பதில், இவர்தம் கருத்தைக் கை விட்டு, எதிர் நிற்பவர்க்கு இணையாக நிற்கவும், தோள்களைத் தழுவிக் கொள்ளவும் செய்வார். இதனை, 'இராசாசி' யோடான, காமராசரோடான அவர் இணக்கங்களால் அறிய முடியும்.

அண்ணாதுரையின் மறைவுக்குப் பின், 'அண்ணாவின் கொள்கை' பெரிதானது. அவரே கொள்கையின் அடையாளமாக்கப்பட்டார். தி.மு.க, அண்ணா தி.மு.க ஆனதும், அதுவே பின்னர் 'அண்ணாவின் வழி'யில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க ஆனதும் ஆராய்ச்சிக்கு உரியன. இப்போது, 'அண்ணாவழி'யிலிருந்து, ம.கோ.இரா (எம்.சி.ஆர்) வழி என்று தோன்றியுள்ளது. இதன் உள்ளீடாக இன்று திருவள்ளுவர் ஒருகுறியீடாக்கப் பட்டுள்ளார். அண்ணா வழி, திருவள்ளுவர் வழி என்று சமப்படுத்தப்படும் நிலையும் தமிழகத்தில் தோன்றக் கூடும். ஏனெனில், அண்ணாதுரையை 'தென்னாட்டுக்காந்தி' எனப்பட்டதும் உண்மை என்பதால். 'இந்நாட்டு இங்கர்சால்,' 'தென்னாட்டுக் காந்தி'யான வியப்பு, தமிழக வரலாற்றை எப்படியெல்லாமோ குழப்பி விட்டிருக்கிறது.

பார்ப்பனர், பார்ப்பனியம் எனப் பேசப்பட்ட வரலாறு செயலலிதாவை, தி.மு.கவின் தாய்க் கழகமான தி.க (தந்தைக கழகம் என்று சொலவது பொருத்தமாக இருக்கும்) 'சமூக நீதி காத்த வீராங்கனை' ஆக்கியுள்ளது. இராசாசியைக்'குல்லுகபட்டர்' என்ற அண்ணாவழி மாறி, மூதறிஞர் ஆக்கிய போது, இப்போது செயலலிதாவை' வீராங்கனை' யாக்கிய போதுள்ள எதிர்ப்பு இல்லை என்றே கூறலாம்! இன்று, தி.மு.க.விலிருந்து ம.தி.மு.க. தோன்றியுள்ளது. இதன் பொதுச் செயலாளர் வை.கோ, அடிக்கடி கூறுவது 'எங்கள் வழி அண்ணாவழி' என்பதாகும்!

அண்ணா வழி, 'தேர்தலில் கொள்கை பெரிது; பதவி பெரிதன்று; கொள்கைக்காகப் பதவியை விட்டு விலகும் வழி' என்று கருதியதுண்டு. ஆனால், இன்றும் சரி, அன்று அண்ணா காலத்திலும் சரி, 'பதவியை'விட்டுவிட அண்ணா வழிக் கட்சி—கட்சிகள்—முன் வருவதில்லை. இன்று 'அ.இ.அ.தி.மு.க' கொள்கை உலகம் அறிந்தது. அண்ணா கொள்கை இப்போது, செயலலிதா நிலை (கொள்கை) என்றாகி விட்டது:

ஆனாலும், அண்ணாவின் சாய்காலில் வளர்கின்ற நோக்கமும் ஆசையும் தமிழகத் தலைமைகளிடம் நீடிக்கவே செய்கின்றன. அதன் விளைவே, எத்தனை அசைவுகள், அவமதிப்புகள் வந்தபோதும் 'திராவிடம்' தமிழனைச் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறது. அண்ணா என்ற இழையில் இவை இணைந்து போயின. ஆகவே, 'தன்மானம்' கூட, தமிழர்க்குப் பெரிய சிக்கலாக இல்லை. இதனைக் கை விடுவதிலும் அண்ணா வழிக்கு ஒரு பங்கிருக்கின்றது எனவே தோன்றுகின்றது. வை.கோ. அண்ணா வழி அண்ணா வழி என்பது, கலைஞர் எதிர்ப்புக்காக. மறுமலர்ச்சிஅண்ணா வழியில் ஏற்படக் கலைஞரே காரணம், அவர் ஒரு காரிருள் எனபது வை.கோ.வின் முடிவுகளாகும்.

புதிய கட்சிக்கு 'மறுமலர்ச்சி தி மு.க' என்று பெயரிடக் காரணம்? என்ற கேள்விக்கு வை.கோ,

''அண்ணா எந்த மறுமலர்ச்சியைக் காணக் கழகத்தை உருவாக்கினாரோ, அந்தக் கழகத்திலேயே இடையில் காரிருள் கவ்வியதால் ஏற்படுத்த நேர்ந்த மறுமலர்ச்சியைச் குறிக்கவே இப்பெயர்'' என விடை தருகிறார். இங்கே 'இடையில் காரிருள்' எனக்(கலைஞர்) கருணாநிதி பற்றியே குறிப்பிட்டிருக்கிறார் எனபது வெளிச்சம். ''அண்ணா இருந்த காலத்தில் கொள்கைகள், அண்ணாவாலேயே வகுக்கப்பட்டுக் கைவிடப்பட்டன'' என்று கூறும் கருத்தை வை.கோ சிந்தித்தால் அண்ணா வழியும் பேசமாட்டார்; தி மு.கவையும் கட்சிப் பேரில் இணைக்க மாட்டார். வை.கோ.வின் கொள்கை அவ்வளவுதான்!

வை.கோவின் 'நீதி' உணர்வு, கொள்கைப் பிடிப்பின் உச்சத்தை அறிய,அவர் ஒரு கேள்விக்குக் கூறிய மறுமொழி போதும்.

''தமிழ் இலக்கியத்தில் தங்களுக்குப் பிடித்தது எது? காரணம் என்ன?'

''சிலப்பதிகாரம்'. ஏனென்றால், அது நீதி காக்க எழுந்த நெருப்பு வெள்ளம்''

வை.கோ.வின் விடை, தமிழக—ஏன் இன்றைய இந்திய அரசியல் காரர்களின் வலக்காரத்திற்குக் கொஞ்சமும் குறைந்ததன்று எனக் காட்ட வல்லது. தமிழக மக்களின் அரசியல், தமிழக மக்களின் தேவை. தமிழக மக்களின் போராட்டம் இவற்றின் ஞாயம் – நீதி கேட்டுப் போராடக் கூடியவர்களா இத் தலைவர்கள்? இவர்களின் விருப்பம்—இவர்களுக்குப் பிடித்தது. பிடிக்காததுதான் மக்களின் விருப்பமாக இருக்க வேண்டும்! என எதிர்பார்க்கிறார்கள். இதில் எந்த அரசியல் தலைவர்களும் விதிவிலக்காக இருப்பதாகத் தெரியவில்லை!

'படைப்பவனா பார்ப்பவனா' என்ற தலைப்பில் வை.கோ. சார்பு மணிவண்ணன் எழுதிய கட்டுரை படித்தேன். அதில் அவர் குறிப்பிட்ட 'மாந்த நேயம்' பற்றிய மதிப்பீடு மெய்சிலிர்க்க—உளம் நடுங்க வைப்பது! காலவாய் வெள்ளத்தோடு போய்விட்ட 'நண்பனை'ப் பற்றிக் கவலைப்படாமல்—தேடிப் பிடிக்காமல்—கவலையை மறக்கத் திரைப்படம் பிடிப்பிலும், அப்படப் பிடிப்பாளர் தந்த விருந்திலும் கலந்து கொண்டவர்களின் 'கொடுமனம்' பற்றிக் கூறியுள்ளார் மணிவண்ணன். அப்பேர்து சத்தியராசு என்ற நடிப்புக் கலைஞர், அந்த மாந்த நேய மற்ற இளைஞர்களைச் சட்டையைப் பிடித்துக் குலுக்கிய விளக்கம் கூறி 'மாந்த நேயம்' படைப்பவனிடம் உள்ளது, படம் பார்ப்பவனிடம் இல்லை என்பது போலப் பேசியுள்ளார். இங்கே, அவ்வளவு நேரம் கவலையை மறக்க முயன்றும் முடியாமல், மறுபடி அச்சத்தின் பிடியில் தவித்த அந்த இளைஞர்கள்—திரைப்படப் பிடிப்பின் மாயையில்—எப்படி ஒரு கடவுள் நம்பிக்கை உள்ளவன் தன் சிக்கல்களுக்குத் தீர்வாகக் கடவுளை நாடுகிறானே, அப்படிப்பட்ட தீர்வையே அந்த இளைஞர்களும் திரைப்படங்களில் தேடுபவர்களாக இருப்பதை நாம் சிந்திக்க வேண்டும். இப்போது ஒரு நிகழ்ச்சி—இசுடாலின் (Stalin) பற்றிய வரலாற்றுக்குறிப்பு—நினைவுக்கு வருகிறது. 'மாந்த நேயம்' அற்றவராக, மூடராக இசுடாலினைச் சித்திரம் போடும் முதலாளிய மூளைகள், அவரிடமுள்ள மாந்த நேயப்பற்றை உணர இந் நிகழ்ச்சி உதவும்!

தலைமறைவுக் காலம். கட்சித் தோழர்களை இசுடாலின் தேடி சந்திக்கிறார் கட்சித் தோழர்கள் பனிப்பள்ளத்தில—காணாமற் போன ஒரு தோழன் பற்றிக் கவலையின்றி இசுடாலினிடம் கூறுகிறார்கள். அவர்கள் மீது இசுடாலின் எரிச்சலும் சினமும் கொள்கிறார் அவர்கள். ''ஆடு, மாடா, அந்த (மனிதனால்) மாந்தனால்—ஒரு குட்டியைத் தரமுடியாது; அவன் எதற்கும் ஆகமாட்டான்.'' என்று 'போனவன் போனாண்டி' என்பது போல் பேசினார்கள். இசுடாலின் துயரப் பட்டார்.

'மாந்த நேயத்தை' விழுங்கி விட்ட இந்த அமைப்பு பொருளுறவைக் கொண்டதாக்கபபட்டுள்ளது. இதில் 'மாந்த நேயம்' கானல் நீர். அதனைத் தேடிச் சோர்ந்த இளைஞர்கள் தங்களின் 'தீர்வுக்கு' வடிகால் தேடுகிறார்கள். இதனை 'இசுடாலினால்' புரிந்து கொள்ள முடியும். கலைஞனால் ஒரு படைப்பாக்கிப் பணம் பண்ண முடியும். இதிலும், 'மக்களை' சுரண்டப்பட்டு எதிலிகளாக்க—நேயமும் அற்றவர்களாக—மாற்றப்பட்டு விடுகிறார்கள்! மாந்த நேயம், மக்கள் உறவுச் சார்புக்கு உட்பட்டனவே பொதுத் தன்மையை மாந்த நேயத்தில் காணமுடியாது. ஆனால், நடிக்க முடியும்,

ஒரு தலைமை, கட்சியின் சார்புகளை ஒட்டியே 'நேசம்' எழுகிறது. போற்றப்படுகின்றது. இதனைக் கடந்த 'நேயம்' துறவு நிலையில் 'தோன்றுதல்' உண்டென்பர். நமக்கு இது தெரியாது. ஏன், தேவையும் அற்றது! அண்ணாவின் மாந்த நேடம், இனம் சார்ந்ததா, ஆம் எனில், (அவர் தம்' கொள்கை நழுவல்' காரணமாக) இந்திய—பாரத பார்ப்பனிய—தரகு முதலாளிய அரசுடன் உறவு கொண்டது தவறாகும். 'மாந்த நேயம்' சார்ந்தது எனில், அவருடைய 'அரசியல் பிழை'யானது.

அண்ணா காலத்தில் நடந்த 'அரசியல் படுகொலைகள்' வெண்மணிச் சாவுகள் பற்றி வை.கோ. போன்றவர் வாய் திறக்க வேண்டும்.

கழுதை விட்டையில் முன் விட்டை பின் விட்டை பற்றிய ஆய்வுதான், அண்ணா வழி பற்றிய முடிவு. 'அண்ணா வழி' என்ற வரலாற்றின் ஏற்றம் இறக்கம் அரசியல் சூழல் கொண்டு தெரிய வேண்டியவை. அந்த வழியின் தொடர்ச்சி என்பது, இன்றைய மாறுதலை— மாற்றங்களை— பாய்ச்சல்களைக் காண மறுப்பதாகும்! அறிஞர் பேரறிஞர் ஆன வரலாறும், அண்ணாவின் கடந்த காலக் கொள்கை. வெறும் அதற்கான காரணங்கள் மட்டும் கொண்டவை எனப் பித்தலாட்டம் பண்ணுவதும் பற்றி அண்ணா வழி பற்றிப் பேசுகிறவர் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

அண்ணா குறியீடென்றால், இன்றுள்ள நிலைமைகளில் அவருடைய பொருந்தாப் போக்குகளைக் கைவிடும் துணிச்சல் வேண்டும். தொன்மக் கதைகளில் வரலாறு காணலாம். தொன்ம வரலாற்றை மூடியுள்ள—மூடங்களை—தப்பெண்ணங்களை அகற்றும் துணிவுற்றவர், அவையே சரியென்று மயங்கிப் பிறரையும் மயக்குவர்! எனவே, அண்மைக் கால ஒரு கட்சி வரலாற்று நாயகனைச் சரியாகப் புரிந்து, இருந்த மக்களுக்கான பாதையை வகுப்பதில் பொறுப்புணர்வுடையவர்களாக நாம் வாழ வேண்டும்! ''சான் இலக்கியமாக அண்ணா உருவாக்கிய இந்த இயக்கம் தமிழ் நாட்டின் ஆயிரங்காலத்துப் பயிர். இப்போது இந்த இயக்கம்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Scanned with CamScanner

முன்னிதழ்த் தொடர்ச்சி. தொடர்: 2

# தமிழர்களின் அடிமைநிலையும், 'சாதி'யையும்-'இறைவனை'யும் இறுக்கமாக்கியுள்ள 'பார்ப்பனிய முடிச்சும்!

காரடிப்பட்டி. க கண்ணன். அறி.இ.

"இந்தச் சூழலில், போர்க் கொள்ளைகளின் வழியாக வந்த பெரிய செல்வங்களைத் தம்முடைய பழங்குடிகளுக்குப் பகிர்ந்தளித்தது போக, மிஞ்சிய மீத்தங்களைத் தன்வயமாக்கிக் கொண்ட தலைவனும் அவனைச் சார்ந்த தலைமக்களும் ஒரு புதிய அதிகாரமாக வளர்ந்தனர். போர் மேல் செல்ல முடியாத நாள்களில் பயிர்த் தொழில் செய்வதால் விளைந்த குமுக மீத்தங்கள் வேறு வந்து சேர்ந்தன. இவற்றையெல்லாம் ஒரு குலத்திலிருந்த தலைமக்கள் தம் வயமாக்கிக் கொள்ளப் பார்த்தனர்."

"குமுக மீத்தங்களைத் தலைமக்கள் தங்களுக்கெனத் தம்வயமாக்கிக் கொண்டபோது உட்பிளவுகள் தோன்றின. தொல்குலப் போர்களில் பிடிபட்டவர்களை அடிமைகளாக்கினர். அந்த அடிமை உழைப்பை நம்பி ஆண்டைக்குலம் நெறிப்படுகையில், தொழில்களும் தலைமுறை வழியில குதிரத் தொடங்கின. இவ்வாறு அடிமைப்பட்ட குலங்கள்-தாம் அடிமைச்சாதிகளாகத் திரிந்தன. பறையரும் பள்ளரும் சாணரும் இத்தகைய அடிமைச்சாதிகள். முழுமையாக அடிமைப்படாத பழங்குடிகளும் குலங்களும் நாகரிக உலகுடன் உறவுபட்டோ சார்ந்தோ வாழத் தொடங்கிப் பழங்குடிகளாயின. கள்ளரும் மறவரும் போன்ற பழங்குடிகள். இந்த வகையைச் சேர்ந்தவர்கள், பாதி அடிமைப் படவும் மறுபாதி தனித்தியங்கவும் வல்ல பள்ளிகள் போன்றோர் இடைத் தரப்பினர். அதே போல், ஆள வந்த சாதிகள் ஆண்டைச் சாதிகளாயின"

(—'வகுப்பும் சாதியும் வரணமும்'— குண. பக்கம் 14, 15)

**மெய்யியல்:** மார்க்சியமென்பது இறுதி ஆய்வில் ஒரு விடுதலை நெறி. மெய்யியலென்றால் என்னவெனக் கேட்டால், 'இயற்கை, குமுகம், அறிவு ஆகிய துறைகளில் விளங்குகின்ற அனைத்தும் தழுவிய பொது நெறிகளைப் பற்றிய கல்வியே மெய்யியலாகும்' என நாம் இதுவரை சொல்லி வந்தோம். இது சோவியத்து மார்க்சிய நூல்களில் இடம்பெற்று வந்துள்ள கருத்தாகும். இயற்கையின் ஊழ்பாடுகளை(விதிகளை)க் கற்பது இயற்கை அறிவியல். குமுகத்தின் ஊழ்பாடுகளைப் பற்றிக் கற்பது குமுகியல். அறிவின் ஊழ்பாடுகளைப் பற்றிக் கற்பது உளவியல். இவ்வாறாயின மெய்யியல் என்பது நேர் அறிவியலுக்கு ஈடானதாகுமா? இத்தகைய குறைப்பார்வை சோவியத்து மார்க்சி-

(முன் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சி பெற்றுள்ளது" வை.கோ. இதில் உண்மை எது? செத்துப் போனவர்கள் அதிகம் கனக்கிறார்கள்—அண்ணாவும் வை.கோ.விற்கு ஒரு சுமையே. அவரா ம.தி.மு.க.வை உருவாக்குகிறார். அவர் பெயரைச் சொல்லி வை.கோ., தி.மு.கவின் உள்ளுடைவைப் பயன்படுத்தி 'உயர்ந்து' உள்ளார். இதில் 'திராவிடத்தை'ச் சாகாமல் பார்த்துக் கொள்ள இத் 'திராவிடச் சிசு' வந்திருப்பதுதான் பெருமை! வாய்வீச்சு, கொள்கை பற்றிக் கவலையின்றிக் கைதட்டல் வாங்கப் பேசும் ஆரவாரம்—'மடமையை' வைத்துப் போலிச் சரக்கை விலையாக்கிடும் வல்லமைக்கு உண்மையான கலைஞர் வாரிசு—பிறங்கடை—வை.கோ தான்! இவர், "கலைஞர், தம் மகன்களை இசுடாலின், அழகிரியை பிறங்கடைகளாக்க முயல்கிறார்." என்று பேசுவது திசை திருப்பலே. 'வாரிசு அரசியல்' போட்டியில் 'தந்தையை' வீழ்த்திப் பட்டத்திற்கு வந்ததில் வை.கோ. இன்று மகிழலாம்! ஆனால், தமிழகம், அண்ணா காலத் தமிழகமன்று! வை.கோவும் அண்ணா இல்லை. இந்த எச்சரிக்கை வை.கோவிற்கு மட்டுமன்று, கலைஞர் கருணாநிதிக்கும் பொருந்தும்.

அண்ணா இரங்கற் பத்துப் பாடியுள்ள பாவலரேறு அவர்கள் அண்ணாவின் 'தகுதி'யைச் சரியான முறையில் மதிப்பிட்டிருக்கிறார்கள்!

அண்ணாவின் புகழ், அண்ணாமேல் அன்பு, அண்ணாவின் சொல்லாற்றல், பற்றிப் பாடிய அவர், 'விட்டுச் சென்ற' பணியையும் தொட்டுக் காட்டுகிறார்.

"மட்டில் முதுமைப் பெரியார் பயிற்றிய
மாணவருள்
குட்டி அரிமா எனவெளி யேறிக் குழுக்குழு வாய்த்
தட்டி எழுப்பிடு வீறுரை யால் இத் தமிழ்நிலத்துள்
கொட்டி விதைத்தவை காய்க்குமுன் ஆவி
குலைந்ததுவே"

பிரிவின் ஆற்றாமையும், நாட்டின் நிலைமையையும் உய்த்துணர்த்துகின்றார் பாவலரேறு.

...ஆரியரும்
போற்ற நடந்தான் அதுதான்
அவன்றன் புகழ்க்குறையே"

என்று 'அண்ணாவின்' குறையை நயமாகவும் கோடிட்டும் காட்டியதை இங்கே எண்ணின் தமிழின வரலாறு 'அண்ணா வழி'யில் போவது சரியன்று என நிறுவப் போதும். O

யத்தின் விளைவால் வந்த வினையாகும். உள்ளபடியே மெய்யியலென்பது நேர் அறிவியலுக்கும் அப்பாற் பட்டதாகும்.''

மேலை நாட்டு அறிவியலோ ஒரு தெரிவியல் (theoretical). அறிவியலை முழுமையாக இன்னும் வளர்த்துக் கொள்ளவில்லை. முதலாளிய பண்டப் படைப்பை ஊக்குவிக்கத் துடிக்கின்ற ஒரே நோக்கத்தைக் கொண்ட பட்டறிவு (empirical) அறிவியலாகவே இன்னும் இருந்து வருகின்றது. அந்த மேலை அறிவியல் ஓர் ஆன்மா (குமுக ஓர்மை) இல்லாத பொருளுலகத்தையே நாடி ஓடுகின்றது. அது படைத்த அணுவியல் கொள்கை உலகத்தை-யே அழிக்கவல்ல அழிவாற்றலின் தொகையாகிய அணுகுண்டையும் (nuclear bomb) படைப்பதில் தான் கொண்டுபோயிருக்கிறது. ஆகவே, இத்தகைய அறிவியலுக்கு ஈடானதாக நாம் மார்க்சியத்தைக் காட்டுவோமாயின், சமயத் தலைவர்களிடமும் ஆன்மிகர்களிடமும் நாம் குட்டுப்பட நேரும்''

இயங்கியல் மெய்யியலோ மார்க்சியம் தோன்று-வதற்கு முன்பே நெடுங்காலமாக இருந்து வந்துள்-ளது. ஆனால் தற்கால அறிவியலைக் கொண்டு தன்னை நிறைவுப்படுத்திக் கொண்ட ஓர் உலக விளக்கமாகவே மார்க்சியம் படிவளர்ச்சியுற்றது. மதங்கள் யாவும் ஒருவகைத் துறக்கத்தைப் (அல்லது விடுதலையை அல்லது முத்தியை அல்லது நிருவாணத்தை) பற்றிப் புகட்டி வருகின்றன. குமுக உறவுகளிலிருந்து தனிமைப் பட்டு உழைப்புச் செயலிலிருந்தும் உலகச் சுமைகளிலிருந்தும் விடு-வித்துக் கொள்கின்ற தனியாளின் அகவய விடுதலையாகத் தான் அஃது இருந்து வந்துள்ளது. ஆனால் மார்க்சியம் புகட்டுகின்ற விடுதலையோ மாந்த நேயத்தைத் தழுவியது. தனியாளுக்கும் குமுகத்திற்கும் இடையிலான உறவுகளை முழுமைக்கும் பகுதிக்கும் இடையிலான இலக்கணமான இயங்கியல் உறவுகளாக மாற்றவல்ல மாந்த விடுதலை நெறியாக அஃது இருக்கின்றது. மாந்தரின் மீதான எல்லா வகையான புறத்தளைகளையும் அகத் தளைகளையும் அறிவுத் தளைகளையும் தனி நிலை பொது நிலை ஆகிய இரு நிலைகளிலும் விடுவித்து, பொது நேயமாகிய கட்டுக்குள் அவர்களை ஒரு கட்டற்ற நிலைக்கென விடுவிக்கின்ற விடுதலை மெய்யியல் அஃதாகும். அறிவியலைத் தழுவிய இலக்கணமே மார்க்சிய மெய்யியலின் உள்ளீடாகும்.''

[—தமிழியப் பொதுவுடைமை-குணா, பக்கம் 20:21]

அடுத்து மார்க்சியச் சிந்தனையாளரான தோழர் கருணா மனோகரன் அவர்கள், திராவிடர் கழகக் கொள்கை பற்றியும் பொதுவுடைமை இயக்கங்கள் பற்றியும் கீழ்க்காணுமாறு திறனாய்வு செய்கின்றார்.

''பார்ப்பனரல்லாத எல்லாப் பிரிவு மக்களுக்கும் தேவைப்பட்ட, பார்ப்பன எதிர்ப்பு இயக்கம் என்ற முதல் கட்டம் சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு என்ற இரண்டாவது கட்டத்திற்குள் நுழைய-வில்லை. இது ஒரு வரலாற்று விலகல் (Historic deviatoin)''—என்றும்,

''பார்ப்பன எதிர்ப்பில் ஓர் அம்சம் • கடவுள் மறுப்பு. ஆனால் அதற்கு ஒரு வரையறை உண்டு. பார்ப்பனர்கள் இல்லாத எல்லாச் குமுகாயங்களி-லுமே கடவுள் இன்றும் கூடுதலாகவோ, குறை-வாகவோ இருக்கின்றார். மனித வாழ்வில் தோன்றும் எண்ணற்ற சிக்கல்களிலும் இயற்கைப் பற்றிய வியப்பிலும் மனிதன வாழுமவரை கடவுள் அவனுக்குத் தேவைப்படுவார் வியப்பினால் தோன-றும் பெருமூச்சிற்கும் அவலங்களால் ஏற்படும் பெருமூச்சுக்கும் ஒரு வடிகால் தேவைப் படுகிறது. இயற்கை மற்றும் குமுகம் பற்றிய அறிவியல் விளக்கம் பெற முடியாத சாதாரண மனிதனுக்கு நிம்மதிப் பெருமூச்சாக ஒரு கருத்து; ஓர் உருவம், ஓர் உலசம் என்று ஒன்று தேவைப்படுகிறது. பார்ப்பனக் கடவுள் ஆதிக்கக் கடவுள்கள; அநீதியைப் போற்றும் கடவுள்கள், பாலுணர்வில் வக்கிரக்கடவுள்கள். ஆனால் சாதாரன உழைக்கும் மக்களின் கடவுள்கள் நம்பிக்கைக் கடவுள்கள; ஊக்கத்தைக் கொடுக்கும் கடவுள்கள். இவற்றை நாம் பிரித்துக் கையாளாமல் போனது நமது கொள்கை வலுவலாகும். உழைக்கும் மக்களை அடிப்படையாகக் கொள்ளாத ஒரு பகுத்தறிவைப் பேசியதன் விளைவு என்றும் இதைச் சொல்லலாம். நமது மதிப்பிற்குரிய சுப்பனும் குப்பனும் ஆர்.எஸ். எஸ்க்கு காது கொடுப்பதன் காரணம் இதுதான்.''—என்றும்

'மார்க்சியத்தை நாம் தெரிந்த அளவுக்கு கீதையைப் பற்றியோ புத்த தத்துவம் பற்றியோ, குருநானக் பற்றியோ, குர்-ஆன் பற்றியோ தெரி-யாமல் போனதற்கு மார்கசியத்தை வெறும் வரட்டுச் சூத்திர மாக்கியது. காரணம் இல்லை என்று கருது-கிறீர்களா? மார்க்சியத்தைக் காலத்திற்கும் களத்-திற்கும் அப்பாற்பட்ட புனிதக் கோட்பாடாகக் கருதியது காரணம் இல்லை என்கிறீர்களா?''

''அரசியல் பொருளாதார உணர்வுகளை விட, குமுகவியல் உணர்வுகள் ஆழமானவை, அழுத்த-மானவை, இப்படிச் சொல்வது எல்லா நாடுகளுக்-கும் பொருந்துமா என்பதை விட, இந்து சாதிய குமுக அமைப்பிற்கு நூற்றுக்கு நூறு பொருந்தும். இன்றைய ஆர்.எஸ்.எஸ்,பி.ஜே பி.யின் வளர்ச்சி இதைத் தெட்டத் தெளிவாக உணர்த்த வில்லையா?''—என்று கூறுகின்றார்.

இத் திறனாய்வுகளில், இங்குள்ள மக்களின் மனவுணர்வுக்கும் அறிவுணர்வுக்கும் உள்ள இடைவெளியையும், இஃதையும பார்ப்பனியம் சாதிக்கும் கடவுளுககும் முடிச்சுப்போட்டு மக்களை அடிமைப் படுத்துவதையும் தெளிவாக்குகின்றார். ஆயினும் அரசியல் நிலையில் பார்ப்பனியம் உயிர் வாழ்கின்ற

Scanned with CamScanner

இனங்களின் விடுதலை பற்றியோ இவர் தெளிவாக்க வில்லை. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறுதியாக மார்க்சிய—இலெனினிய—மாவோ-யியல் சிந்தனைக்கு இளமையிலேயே ஆட்பட்ட-வரும், தாம் மக்களிடமிருந்து பெற்ற பட்டறிவு-களைக் கொண்டு, சாதி ஒழிப்பை முன்னிலைப் படுத்தியும் பாட்டாளி வகுப்பின் தலைமையை முன் வைத்தும், தமிழ்க மக்களைத் தில்லி பார்ப்பனிய முதலாளிய ஆட்சியினின்றும் விடுவிப்பதற்கு தமிழ் நாடு பொதுவுடைமைக் கட்சியையும்,பின்னர் தமிழ் நாடு விடுதலைப் படையை அமைத்தவரும் தோழர் தமிழரசன் அவர்களும் உடன் தோழர்களும். கருத்துகளையும் சிந்தனைகளையும் செயலாக்கத் துடித்து, கருவியேந்தித் தில்லிப் பார்ப்பனிய ஆட்சிக்கு முதல் அடி கொடுத்து இளைஞர்களுக்குப் புதிய வழியைக் காட்டியவர் தோழர் தமிழரசன். ஏனெனில் 'பார்ப்பனியம்' சாதிக்குள்ளும் கடவுளுக் குள்ளும், வேதங்களுக்குள்ளும் புராணங்களுக்குள்-ளும் மட்டும் ஒளிந்திருக்கவில்லை. நம் உழைப்பையும் பொருளையும் சுரண்டி, நம் இனத்திற்குள்ளேயே இரண்டகர்களை உருவாக்கி, அரசுப்பதவி அரசியல் பதவி என்ற பெயர்களில் கங்காணிகளை உருவாக்கி, நம வகுப்பு மக்களிலேயே சிலரைக் கூலிப்படைக-ளாக்கி, அவர்களின் கைகளில் கருவிகளைக் கொடுத்து நம்மை அடக்கி ஒடுக்கி ஆளுமை செய்-கின்றது இன்றைய பார்ப்பனிய முதலாளிய ஆட்சி. ஆகவே முள்ளை முள்ளால்தானே எடுக்க முடியும்? நம் முன்னோர்கள் பார்ப்பனிய முதலாளியத்தோடு நடத்திய போர்களில் சில வெற்றியடைந்திருக்க-லாம்; சில தோல்வியடைந்திருக்கலாம். வெற்றிக் குரிய கரணியங்களையும் தோல்விக்குரிய கரணியங்-களையும் படிப்பினைகளாகக் கொண்டு தமிழகத்தின் இளைய தலைமுறை எழுச்சி கொள்ளுமாக!

### என்னுடைய பட்டறிவு நிகழ்ச்சிகள்:

தமிழகத்தில் அடித்தள மக்கள் சாதியாலும் கடவுளாலும் படும் துன்பங்கள் சொல்லில் வடிக்க இயலா. ஒவ்வொரு சாதியாரும் அதற்குள்ளே-யுள்ள பல உட்சாதியாரும் பல குல தெய்வங்களுக் கும், ஊரிலும் நாட்டிலும் உள்ள பொது தெய்வங்-களுக்கும் செய்கின்ற வழிபாடுகளும் பொருள் இழப்புகளும் எண்ணிலடங்கா. சாதிக்கும் கடவுளுக்குமே இவன் அதிகம் அஞ்சுகின்றான். பார்ப்பனர்களும் அவர்களின் குருவான சங்கராச் சாரிகளும் சாதிகளை இறைவன் தான் படைத்தான் என்று பல நூறு ஆண்டுகள் இவனிடம் ஆழ ஊன்றி விட்டனர். மேலும் நம் இனத்திலுள்ள மேல் சாதியாரும் தொடர்ந்து இதற்குத் துணை-போயிருக்கின்றனர்.

தாழ்த்தப்பட்ட தமிழர்களைத் தவிர மற்ற பிற் படுத்தப்பட்ட, மேல்சாதித் தமிழர்கள் அனைவரும் சாதிய ஒழிப்பை முழுமையாக விரும்புவதில்லை. இதில் மறைமுகமாக அவர்களின் மரபு வழியான ஆளுமை மனநிலையும், உழைப்பு மற்றும் பொருளி-யல் சுரண்டலும் இருப்பதை யாவரும் அறியலாம்.

(தொடரும்)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்த-வும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு-91**

**எதைப்பற்றிப் பேசினால், எழுதினால், செயல்படுத்தினால் தங்கள் பதவி, அதிகாரம், செல்வநிலை இவற்றுக்குத் தீங்கு வருகி-றதோ அதைக் கைவிட்டு விடுபவர் அர சியல்காரர்! என்ன வந்தாலும் அவற்றில் ஈடு படுபவரே கொள்கையாளர் (இலட்சியவாதி)!**

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 171.)

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண் : 847829

உறுப்பினர் :

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1.50 |
| ஆண்டுக் கட்டணம் | உரு: 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு: 18.00 |

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.